MIN ALAI

# மின் அலை

January 2025 Volume : 13 Issue 1 Price Rs. 18.00/- Ann. Sub. Rs. 216/-




மாண்புமிகு துணை முதல்வர் அவர்களால் 311 வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையிலான பணி நியமன ஆணை வழங்கப்பட்டது. மற்றும் மின்வாரிய ஓய்வூதியதாரர்களுக்கான புதிய கைபேசி செயலியினை 09.01.2025 அன்று அமுல்படுத்தப்பட்டது.



தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் சங்கம்
பதிவு எண் 124/MDS (அங்கீகரிக்கப்பட்டது)

| தலைவர் | பொதுச் செயலாளர் | பொதுப் பொருளாளர் |
| --- | --- | --- |
| பொர்.A.அந்தோணிபடோவராஜ் | பொர்.V.S.சம்பத்குமார் | பொர்.N.R.செந்தில் |

# மதிப்புக்குரிய வாரிய உயரதிகாரிகளை நமது பொறியாளர் சங்கப் பொறுப்பாளர்கள் சந்தித்து புத்தாண்டு மற்றும் பொங்கல் நல்வாழ்த்துக்களை தெரிவித்தார்கள்



**Thiru.PROMOD KUMAR IPS** / DGP / Vigilance / TNEB



**Thiru.ANEESH SEKHAR IAS** / MD/TNGECL



**Thiru.VISHU MAHAJAN IAS** / JMD / Finance / TNPDCL



**Er.K.INDIRANI** / MD/TANTRANSCO




**Er.A.R.MASCURNAS** / Director / Distribution / TNPDCL

ஆசிரியர்
பொர்.உ.ராஜேந்திரன்
9092687454

## ஆசிரியர் குழு

பொர்.A.அந்தோணிபடோவராஜ்
பொர்.V.S.சம்பத்குமார்
பொர்.N.R.செந்தில்
பொர்.S.செந்தில் முருகன்
பொர்.K.பிரபாகரன்
பொர்.S.அமர்நாத்

| Page | Contents |
|---|---|
| 7 | Out Representation |
| 8 | Board Orders |
| 11 | வாரிய பத்திரிக்கைச் செய்திகள் |
| 13 | TN aims to generate 7,500 MW RE |
| 14 | ஒருங்கிணைந்த ஓய்வூதியத் திட்டம் |
| 15 | மாநில செயற்குழு கூட்ட அறிக்கை |
| 18 | விண்வெளியில் சாதித்து வரும் இந்தியா |
| 20 | TNEB Pensioners App |

**TNEB ENGINEERS' SANGAM**
**Udangudi Building,**
**TNEB Complex,**
**144, Anna Salai,**
**Chennai - 600 002.**
**Ph : 2852 1968**
**No. 44, Ramasamy Garden Street,**
**Royapettah, Chennai - 600 014.**
**Ph : 2848 7517**
**E-mail : tnebes@yahoo.co.in**
**Web : www.tnebes.org**

**President : 9443872166**
**General Secretary : 9840956783**
**General Treasurer : 9499014992**

# மின் அலை

தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் சங்க செய்தி மலர்

மலர் 13 ஜனவரி 2025 இதழ் 1

## கஞ்சி குடிப்பதற்கிலார்....

மனித உடலின் நரம்புகளைப் போன்று தமிழ்நாடு முழுமைக்கும் பணியும், இயக்கமும், பரவலும் அடர்த்தியும் கொண்டது தமிழ்நாடு மின் வாரியம். அதன் மனிதவள மேலாண்மை விந்தைகள் பாரீர்....

வணிக சந்தையில் ஒரு நிறுவனத்தின் உற்பத்திப் பொருளின் விற்பனை குறைந்தால், அந்த நிறுவனத்தின் ஊழியர்களின் எண்ணிக்கை குறைக்க வேண்டியதுவரும். தற்காலிக ஊழியர்கள் தற்காலிகமாக வேலை இழப்பார்கள். இது வழிவழியாக வருகிற இந்திய மேலாண்மைச் செயல்பாடு. இதுவே அறிவியல் பூர்வமற்றதும் தொழிலாளர் விரோதப் போக்கும் ஆகும். ஆனால் தமிழ்நாடு மின்வாரியத்தின் மேலாண்மை இன்னும் விநோதமானது.

அனைத்து துறைகளிலும் வளர்ந்து வருகின்ற தமிழகத்தில், மின் தேவையானது நித்தம் நித்தம் அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. தினமும் ஆயிரக்கணக்கான புதிய மின் இணைப்புகள் கொடுக்கப்பட்டு வருகின்றன. 24 மணி நேரமும் இயக்கமும் பராமரிப்பும் அத்தியாவசியம் ஆகின்றது. அதை பாதுகாத்து செயல்படுத்திட பணியாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட வேண்டும். ஆனால் மின்வாரியம் காலியிடங்களை நிரப்பாமலும் பல பணியிடங்களை குறைத்தும் வருகிறது.

கோடிக்கணக்கில் செலவு செய்து துணை மின் நிலையங்கள் புதியதாக நிறுவப்பட்டு செயல்பாட்டுக்கு வந்துள்ளது. இதற்குக்கூட பணியிடங்களை உருவாக்காமல் காலம் கடத்துகிறது. இதற்கு ஈடு செய்ய எத்தனை பணியிடங்களை காலி செய்ய முடியும்??!! என்று கேட்பது வினோதமாகவும், ஆச்சரியாமாகவும் உள்ளது.

தமிழ்நாடு மின்சார வாரிய மறு சீரமைப்பு மற்றும் மறு கட்டமைப்பு பணிகள் வேகமாகவும், மறைமுகமாகவும் நடைபெற்று வருவதாக அறிகிறோம். எவ்வித ஆலோசனைகளையும் மேற்கொள்ளாமல் துரிதகதியில் செயல்படுத்தப்படும் அனைத்து வாரிய உத்தரவுகளும், இதுவரை களத்தில் பல்வேறு குழப்பங்களை ஏற்படுத்துவதோடு மட்டுமல்லாமல் ஒரு சரியான தீர்வு இன்றி தொக்கி நிற்கிறது. அதுபோன்றே இப்போது மறுசீரமைப்பு பணிகள் தொழிற்சங்கங்களின் எவ்வித ஆலோசனையும் இன்றி.... ஒரு தனியார் நிறுவனத்தின் அறிக்கைகளை மட்டுமே கண்மூடித்தனமாக அமுல்படுத்துவதும் மோசமான களவிளைவுகளையும், பிரச்சனைகளையும் ஏற்படுத்தும் என்பதே திண்ணம்.

ஒரு தனியார் ஆலோசனை நிறுவனம், வாரியப் பணிகளை அளவிடுவதென்பது பார்வையற்றவர் யானையை மதிப்பிடுவது போல அமையும். அவைகளை செயல்படுத்துவது வாரிய நலனுக்கு நாமே குழி பறிப்பது போன்ற செயலாகும். தமிழ்நாடு மின்வாரியம் இத்தகைய பிற்போக்கு செயல்பாடுகளிலிருந்தும் ஆலோசனைகளிலிருந்தும் விடுபட வேண்டும்.

களப்பணியாற்றும் பொறியாளர்கள் மற்றும் பணியாளர்களுக்கு மட்டுமே தேவைகள் என்ன? எங்கு? என்றும்... அது ஏன் தேவை? என்ற கள நிதர்சனம் தெரியும். பின் விளைவுகளை நன்கு ஆராய்ந்து சிறப்பான ஆலோசனைகளுடன் சீர் அமைப்பு பணிகள் அமுல்படுத்தப்பட்ட பின்னரே, சீர்திருத்தங்களை மேற்கொள்வதே சரியான வழியாகும்.

களபணிகளில் அனுபவமற்ற காரணத்தினால் களச் சூழ்நிலையை அறியாமலும், அதை பற்றிய கருத்துகளில் தெளிவில்லாமலும், அதனால் ஏற்படும் விளைவுகளைப் பற்றி தெரியாமலும், வெறும் வருவாய்யை பற்றி மட்டுமே எண்ணத்தில் கொண்டு, “வருவாய் ஈட்டும்” என்ற பெயரில் களத்திற்கு ஒவ்வாத பல உத்தரவுகளை வெளியிட்டது, பொதுமக்களிடம் மிகுந்த அதிருப்தியை ஏற்படுத்தியது.

அதிகாரிகளின் இயலாமையின் காரணத்தினால் அவர்களால் வழங்கப்படும் கண்மூடித்தனமான உத்தரவுகள் வாரியத்திற்கு மிகவும் தீங்குகளை ஏற்படுத்துகிறது. சமீப காலத்தில் பல்வேறு உத்தரவுகள் களத்தில் அமுல்படுத்தப்பட்டு அதனால் ஏற்பட்ட விளைவுகளால், அவ்வுத்தரவுகள் அனைத்தும் நிறுத்திவைக்கப்பட்டுள்ளதே சான்றாகும்.

கள நிலவரம் தெரியாத, அரசின் நோக்கம் புரியாத, சேவை மனப்பான்மை இல்லாத, வளர்ந்து வரும் தொழில்நுட்ப அறிவு பெறாத, சேவைத் துறைக்கான நோக்கம் இல்லாத, தனியார் நிறுவனங்கள் அளிக்கும் மனித வள(?) அறிக்கைகள் சமூகப் பார்வையற்றவை.

தொழில்நுட்ப அறிவு, சிறந்த மனோபாவம் கொண்ட பொறியாண்மை, மேலாண்மைத் திறன், அனுபவ முதிர்ச்சி, சேவை மனப்பான்மை, சமூக அக்கறை உள்ள மின்வாரிய முன்னேற்றத்திற்கான ஆலோசனைகளை செயல்படுத்திட வேண்டும்! செயல்படுத்திடுமா???

“ **நெஞ்சு பொறுக்குதில்லையே –இந்த**
**நிலைகெட்ட மனிதரை நினைந்துவிட்டால்**
**கஞ்சி குடிப்பதற்கிலார் – அதன்**
**காரணங்கள் இவையென்னும் அறிவுமிலார்." – (பாரதி)**

# பொதுச் செயலாளர் கடிதம்



அன்பு பொறியாளர்களே! வணக்கம்.

உத்தரப்பிரதேச மாநிலம் மற்றும் சண்டிகர் மின்சார வாரியங்களை (பகிர்மான கழகம்) தனியார் மயமாக்கும் நோக்கில் மேற்கொள்ளப்பட்டுவரும் மத்திய அரசின் தொழிலாளர் விரோத நடவடிக்கைகளை கண்டிக்கும் வகையிலும், வலிமையான போராட்டங்களை மேற்கொண்டு வரும் உத்தரப்பிரதேசம் மற்றும் சண்டிகர் மின்சாரவாரிய தொழிலாளர், பணியாளர், பொறியாளர்களுக்கு ஒருமித்த ஆதரவினை தெரிவிக்கும் விதமாக 31.12.2024, 23.01.2025 அன்றும் நாடு முழுவதும் NCCOEEE மற்றும் AIFOPDE சார்பில் பெருந்திரள் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

உத்திரபிரதேசம் மற்றும் சண்டிகர் மின்வாரிய பணியாளர்கள் தங்களின் போராட்டத்தை தீவிரப்படுத்தி வருகின்றனர். உத்திரபிரதேச மின்விநியோக நிறுவனத்தினை தனியார்படுத்த டென்டர் விடும் அலுவலகத்தினை முற்றுகையிடும் போராட்டம் நடைபெற்றுள்ளது. இருந்தாலும் அரசு தனது நிலையினை மாற்றிக்கொள்ளவில்லை. இதனை தொடர்ந்து அகில இந்திய அளவில் போராட்டம் தீவிரப்படுத்தப்பட்டு வருகிறது, வரும் 31.01.2025 அன்று அனைத்து மாநிலங்களிலும் போராட்டம் நடத்திட முடிவெடுக்கப்பட்டுள்ளது. உத்திரபிரதேசம் மற்றும் சண்டிகர் மின்ஊழியர்களின் போராட்டம் வெற்றி பெற ஒத்துழைப்போம்.

கடந்த 30.12.2024 அன்று வாரியத்தலைவர் அவர்களைச் சந்தித்து கீழ்காணும் கோரிக்கைகள் குறித்து முறையீடு செய்யப்பட்டது.

- துவக்க நிலை பதவிகளில் உள்ள காலிப் பணியிடங்களை முழுவதுமாக நிரப்பிட வலியுறுத்தி.
- FOC, spl mtce, MRT, P&C, Lines மற்றும் இதர அலுவலக பணிகளுக்கு ஒப்பந்த ஊர்திக்கான தின வாடகை மற்றும் ஒப்பந்த தொகை உயர்த்துவது சம்பந்தமாக.
- GIS mapping, merging of SC ஆகியன பணிகளில் எழும் நடைமுறைச் சிக்கல்களை கலைய உரிய ஆலோசனைகள்.
- நீண்ட காலமாக நிலுவையிலிருக்கும் உதவி செயற்பொறியாளர் /மின்னியல் பதவி உயர்வுகளை 31.12.2024க்கு முன்பாக தகுதியுடைய அனைத்துப் பொறியாளர்களுக்கும் உடனடியாக வழங்குதல்.
- உதவி பொறியாளர் மின்னியல் இயந்திரவியல் மற்றும் சிவில் உள்முகத்தேர்வு பதவி உயர்வுகளை உடனடியாக வழங்குதல்.
- தொழில்நுட்ப உதவியாளர் / மின்னியல், இளநிலைப் பொறியாளர் / சிவில் இரண்டாம் நிலை உள்முகத்தேர்வு பதவி உயர்வுகளை உடனடியாக வழங்குதல்.
- தொடர்ந்து நிலுவையிலிருந்து வரும் வாரிசுப்பணி நியமன உத்தரவுகளை அவ்வப்பொழுது உடனடியாக வழங்குதல்.
- வாரியத் தலைவர் அவர்கள், உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வுகளை உடனடியாக வழங்கிட உத்தரவிட்டுள்ளதையும், உள்முகத்தேர்வு கோப்புகளை விரைவில் பரிசீலித்து இறுதி செய்வதாகவும் உறுதியளித்துள்ளார்.
- மேற்கண்ட கோரிக்கைகள் குறித்து அன்றைய தினம் இயக்குனர் /விநியோகம் அவர்களிடத்திலும் உரிய முறையீடுகள் செய்யப்பட்டுள்ளது.

நமது முறையீடுகளைத் தொடர்ந்து 31.12.2024 அன்று புத்தாண்டு பரிசாக 185 நபர்களுக்கு (1CHD + 138AEs + 46 JEs) உதவி செயற்பொறியாளர்/ மின்னியல் பதவி உயர்வுகள் வழங்கப்பட்டுள்ளது. தொடர்ந்து வாரிய தலைவரிடம்

நிலுவையிலுள்ள உள்முகத்தேர்வு பதவி உயர்வுகள் குறித்து 06.01.2025 மற்றும் 20.01.2025 ஆகிய தினங்களிலும் வலியுறுத்தப்பட்டுள்ளது. வாரிய தலைவர் அவர்களும் விரைந்து பரிசீலிப்பதாக உறுதியளித்துள்ளார்.

தொழில்நுட்ப உதவியாளர் / மின்னியல், இளநிலைப் பொறியாளர் / சிவில் இரண்டாம் நிலை மற்றும் உதவி பொறியாளர் / மின்னியல், இயந்திரவியல் மற்றும் சிவில், உள்முகத்தேர்வு பதவி உயர்வுகளுக்கான கோப்பு அனுமதி அளிக்கப்பட்டு, இறுதி கட்டப் பணிகள் நடைபெற்று வருகிறது. விரைவில் பதவி உயர்வு உத்தரவுகள் எதிர்பார்க்கப்படுகிறது.

இளநிலை பொறியாளர் / மின்னியல் இரண்டாம் நிலையிலிருந்து முதல் நிலை பதவி உயர்வு சம்பந்தமான நீதிமன்ற வழக்கு கடந்த 10.01.2025 அன்று மதுரை உயர்நீதி மன்ற கிளையில் விசாரணைக்கு வந்தது. பொறியாளர் சங்கத்தின் சார்பில் வழக்கில் இணைந்து, சங்கத்தின் தரப்பில் உரிய புள்ளி விவரங்களுடன், வெளிநபர்கள் தொடர்ந்த வழக்கில் வழங்கப்பட்ட இடைக்கால தடையினை உடனடியாக விலக்கி வழக்கை முடித்து வைக்க வாதிடப்பட்டது. மின்வாரியத்தில் நடைமுறையில் உள்ள விகிதாச்சாரங்களை ஆட்சேபித்து எதிர்க்கும் உரிமை, வாரியப் பணியிலில்லாத வெளி நபர்களுக்கு உரிமை இல்லை எனவும், வழக்கினை தள்ளுபடி செய்யவும் வாதிடப்பட்டது. நமது வாதங்களை ஏற்றுக் கொண்ட நீதிமன்றம் வழக்கை 21.01.2025க்கு இறுதி விசாரணைக்கு பட்டியலிட்டு உத்தரவிட்டது.

21.01.2025 அன்று எதிர்தரப்பினர் வாதங்களைத் தொடர்ந்து, வழக்கு விசாரணை 23.01.2025க்கு மீண்டும் ஒத்திவைக்கப்பட்டது. 23.01.2025 அன்று விசாரணையில் நமது மூத்த வழக்கறிஞரின் திறம்பட்ட வாதத்தினால் இடைக்கால தடை நீக்கப்பட்டு, வழக்கு மீண்டும் 06.02.2025 அன்று பட்டியலிட உத்தரவிடப்பட்டுள்ளது.

நாம் எதிர்பார்த்ததையும் தாண்டி நம்மைச் சுற்றிலும் பல்வேறு மாற்றங்கள், ஏற்படும் சூழல் உருவாகி வருகிறது. வாரியம் மறு சீரமைப்பு – மற்றும் சீர்திருத்தம் / உருமாற்றம் (Reformation/ deformation) நோக்கிய நடவடிக்கைகளை விரைவுப்படுத்தியதாக தெரிவித்துள்ளது. இவையெல்லாம் எந்த வகையிலான பாதிப்புகளை நமக்கு ஏற்படுத்தும் என்பதை விழிப்புடன் ஆராய்ந்து எதிர் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

இந்த ஆண்டுக்கான கிளைப் பேரவைக் கூட்டங்கள் வரும் 26.01.2025 முதல் துவங்க உள்ளன. முதற்கட்டமாக TTPS கிளை 26.01.2025 அன்று நடைபெறவுள்ளது. தொடர்ந்து பிப்ரவரி–2ல் சென்னை / தெற்கு, பிப்ரவரி–8ல் CDC கிளை, பிப்ரவரி–09ல் பெரம்பலூர் கிளை, பிப்ரவரி–16ல் திருச்சி மற்றும் காஞ்சிபுரம் ஆகிய கிளைகளின் பேரவை கூட்டங்கள் நடைபெற உள்ளன.

வாரியத்தின் இன்றைய நிலை, நிதிநிலை, வாரியச் செயல்பாடுகள், வாரிய மட்டத்தில் நிகழ்ந்து வரும் மாற்றங்கள், கொள்கை ரீதியான நடவடிக்கைகள், உறுப்பினர்களின் நலன் சார்ந்த நடவடிக்கைகள், மைய அரசின் தனியார்மய நடவடிக்கைகள், அவற்றில் தொழிலாளர்களின் பங்கு மற்றும் செயல்பாடுகள் குறித்து ஒவ்வொரு உறுப்பினரும் அவசியம் அறிந்துகொண்டு மாறிவரும் களச் சூழலுக்கு ஏற்ப தங்களை அறிவுப்பூர்வமாகவும், ஆக்கபூர்வமாகவும் தயார் செய்திட வேண்டுகிறேன். எனவே, கிளைப் பேரவைக் கூட்டங்களில் அனைத்து உறுப்பினர்களும் தவறாமல் கலந்து கொண்டு சங்கத்தின் செயல்பாடுகளை அறிந்து கொள்ளவும், தங்களது கருத்துக்களை பகிர்ந்து கொள்ளவும் வேண்டுகிறேன்.

மாற்றம் ஒன்றே மாறாதது! எத்தகைய மாற்றத்திலும் வாரியத்தை மிளிரச் செய்வோம்!! விழிப்புடன் செயல்படுவோம்!!!

நன்றி

**பொர்.V.S.சம்பத்குமார்,** பொதுச் செயலாளர்

## Our Representation

To
**THE CHAIRMAN cum MANAGING DIRECTOR,**
TNPDCL,
Chennai-600 002.

**Lr.No.GS/ TNEBES/ F1/ D.19 / 2025, Dt. 20.01.2025.**

Respected Sir,

**Sub:** Promotions to the post of Assistant Engineer / Electrical, Mechanical & Civil by Internal Selection – Applications received from individuals consolidated and finalized –Issuing of promotion orders - requested regarding.

**Ref:**
1. Letter No. 004565 / G.55 / G.551 / 2022, Dated: 24.01.2024
2. Letter No. 004565 / G.55 / (N) G.172 / 2020, Dated: 29.01.2024
3. Letter No. 04565 - C / G.55 / (N) G.172 / 2020, Dated: 01.02.2024
4. Lr.No.GS/TNEBES/F1/ D.06 /2024, Dt. 04.11.2024.

Promotions for the post of Assistant Engineer / Electrical, Mechanical and Civil by Internal Selection were called from eligible individuals vide references cited above. The calling for was made based on our Sangam's persistent representations. The numerous applications received have been consolidated and finalized by the Personnel Administration. The selection process has been initiated an year before and it is now at the verge of completion.

In this regard we would like to add that quite huge number of Assistant Engineer posts are lying vacant affecting the day to day works in the field particularly the Section Offices and Generating Stations. Issuing of these Assistant Engineer promotions will hugely benefit our needs.

As ever few external forces under the instigation of an insider representing the Degree holding Engineering community has filed a case to disrupt these promotions. Personnel Administration has taken all efforts in averting these infiltrators who don't have any locus standi. We are very much thankful for the administration in this regard.

It is our duty to reiterate that the prevailing ratio of 1:1 between the Assistant Engineers appointed by promotion through Internal Selection and the Assistant Engineers appointed through the Direct Recruitment has been followed scrupulously throughout these years for more than 3 decades. Details enumerated separately.

Hence, we request the respected Chairman cum Managing Director to instruct the respected Chief Engineer / Personnel to expedite the promotion process and issue promotions to the post of Assistant Engineer / Electrical, Mechanical & Civil by Internal Selection and thus render justice please.

Thanking you, Sir,

Yours Sincerely,
**(V.S. SAMPATHKUMAR)**
General Secretary.

Copy to the Chief Engineer / Personnel / TNPDCL

## BOARD ORDERS

**TAMIL NADU POWER AND DISTRIBUTION CORPORATION LTD**

144, Anna Salai, Chennai - 2.

**Memo No.CE/Comml/SE/Comml/EE3/AEE3/F.G.O.98/FLM-CM-32/2024, dt.23.12.2024.**

**Sub :** Electricity Act, 2003 Central Electricity Authority (Measures relating to Safety and Electric Supply) Regulations, 2023 Notification of voltage level for self-certification under Regulation 32 and 45 and Powers of Inspection under Regulation 32,34,38 and 45 Government Orders G.O.Ms No.98, Dated 14.10.2024 issued by Energy (C2) Department - Instructions issued-Regarding.

**Ref:**
1. G.O.Ms No.98, Energy (C2) Department, dated 14.10.2024.
2. Memo No.CE/ Comml/ SE/ Comml/ EE3/ AEE3/F.Self certification /FLM CM- 436/ 2024, dt. 14.11.2024.
3. Note approved by CMD/TNPDCL on 23.12.2024.

In continuation to the reference (2), the following instruction is issued for uniform adoption in extension of LT supply for multi-storeyed building of more than 15m in height at the voltage upto 650 V.

"For extension of LT supply for multi-storeyed building of more than 15m in height at the voltage upto 650 V, all safety aspects shall be ensured as per the existing procedures in vogue, provision in TNE Codes and Regulations and instructions issued from time to time without insisting on CEIG inspection certificate".

All Chief Engineers/Distribution Region shall ensure that the instruction is communicated upto the level of Section Officers. (i.e. all EEs/AEES/AES/JEs) for implementation and strict adherence.

Any deviation noticed in this regard will be viewed very seriously by the undersigned.

Receipt of the memo may be acknowledged.

SD/-23.12.2024
Director/ Distribution

### REPA Pushes for Green Energy Access

Renewable Energy Producers Association (REPA) has requested the Tamil Nadu govt to allow smaller Industries with low- tension and LTCT electricity services to purchase green energy from third-party generators through open access. Currently, open access is restricted to HT industries. REPA, which represents more than 700 green energy generators, said that Tamil Nadu's renewable energy capacity is behind other states despite favorable conditions. A 2022 ministry of power notification allows open access for consumers with loads of 100kW or more, but final regulations from TNERC are still pending, said REPA, urging the govt to expedite the process.

## TNPDCL (ACCOUNTS BRANCH)

From
The Chief Financial Controller/ Revenue (FAC),
7th Floor, NPKRR Maaligai,
144, Anna Salai, Chennal - 600 002.

To
All the Chief Engineers,
Distribution Region,
TNPDCL

**Letter No.CFC/Rev/FC/Rev/DFC/AAO/Asst/F. Honorarium/D.892/2024, dt.13.12.2024**

**Sub:** TANGEDCO Low Tension services Assessment, Collection and Remittances of C.C. Charges - Services remain un-assessed - payment of Honorarium Further extension upto 31.12.2025 Orders Issued - Reg.

**Ref:**
1. Memo No.CFC/FC/DFC/Rev/D.No.36/2013, dt. 21.01.2013
2. Memo No.CFC/FC/DFC/Rev/D.No.24/2014, dt. 09.01.2014.
3. Memo No.CFC/FC/DFC/Rev/D.No.322/2015, dt. 19.05.2015.
4. Memo No.CFC/Rev/FC/R/DFC/R1/F.Honrm/D.No.241/2016, dt.05.04.2016.
5. Memo No.CFC/ Rev/ FC/ R/ DFC/ R1/ F.Honrm/ D.No.280/ 2017, dt.11.04.2017, D, 54/18, dt. 24.01.2018, D.No. 175/2019, dt.12.03.2019, D.No.102/ 2020, dt.14.02.2020, D.No.68/ 2021, dt.29.01.2021, D.443/2022, dt.06.06.2022, D.3/2023, dt.03.01.2023, D.937/2023, dt.27.12.2023.
6. Lr No. SE/CEDC/Central/DFC/Sr.ATO/F.Rev Aug/D.104/2024, Dt.29.11.2024.

Orders were issued vide reference 5th cited to utilize the services of existing/retired staff for the assessment of un-assessed LT Services in order to ensure 100% Assessment, Collection and Remittance of all services upto 31.12.2024 on payment of Honorarium.

As requested by the Electricity Distribution Circles, in order to avoid non-assessment of the LT Services due to shortage of Assessors, after careful consideration, it is hereby ordered that the arrangement of engaging the existing and retired staff for assessment of LT Service Connections is further extended up to 31.12.2025.

Therefore, it is directed to ensure 100% assessment in all the LT Services including new services and it may also be ensured that the persons engaged for the above work have sufficient knowledge/calibre to execute the work efficiently.

The Honorarium may be paid at the following rates for the period 01.01.2025 upto 31.12.2025:

| Corporation, Municipalities & Town Panchayat | Rural areas & Hill Region |
|---|---|
| 4.00 | 6.00 |

**By order of Director/Finance (TNPDCL)/**
**Chief Financial Controller/Revenue (FAC)**

**TAMIL NADU POWER DISTRIBUTION CORPORATION LIMITED**

**ABSTRACT**

Establishment Class II Service Panel for the post of Assistant Executive Engineer/ Electrical for the year 2023-2024 - Approved - Orders - Issued.

**Administrative Branch**

(Per.) CMD TNPDCL Proceedings No.38

Dated: 31st December 2024
Margazhi -16, Kurothi Varudam,
Thiruvalluvar Aandu - 2055.

**READ:**

**PROCEEDINGS:-**

The names of the following 185 individuals (1 Chief Head Draughtsman, 138 Assistant Engineers/ Electrical and 46 Junior Engineers/ Electrical I Grade) be included in the panel for the post of Assistant Executive Engineer/ Electrical for the year 2023-2024 in Division II, Category-1, Class-II of Tamil Nadu Electricity Board Service Regulations read with the Tamil Nadu Electricity (Re-organisation and Reforms) Transfer Scheme 2010, so as to maintain 3:1 ratio between Assistant Engineers/ Electrical and Junior Engineers/ Electrical I Grade.

## SELECTED LIST OF CHIEF HEAD DRAUGHTSMAN, ASSISTANT ENGINEER/ELECTRICAL & JUNIOR ENGINEER/ELECTRICAL I GRADE

| Sl. No | NAME THIRUVALARGAL | D.O.B | PRESENT CIRCLE | DES. |
|---|---|---|---|---|
| 1 | KASI.M.R | 21.02.1965 | SALEM EDC | CHD |
| 2 | VENKATESAN.N | 09.04.1965 | CDC-I / CHENNAI | JE |
| 3 | DEIVASAMY.R | 16.02.1966 | GOBI EDC | AE |
| 4 | MADHANKUMAR.T | 02.06.1982 | VILLUPURAM EDC | AE |
| 5 | SIVAKUMAR.K | 15.06.1976 | ERODE EDC | AE |
| ⋮ | ⋮ | ⋮ | ⋮ | ⋮ |
| 181 | RAJA.V.M. | 02.06.1971 | KRISHNAGIRI EDC | AE |
| 182 | LATHA.S | 20.01.1966 | SE/POWER PURCHASE | JE |
| 183 | MOHANRAJ.S | 29.07.1977 | THIRUMAKOTTAI GTPS | AE |
| 184 | KARPAGASELVI.A | 08.05.1985 | VIRUDHUNAGAR EDC | AE |
| 185 | VASUDEVAN.R | 02.06.1966 | CHENNAI EDC / SOUTH-I | AE |

M.SUNDARSAN
CHIEF ENGINEER / PERSONNEL

**மின்சாரத்துக்கான வருவாய், செலவு இடைவெளி 45 காசாக குறைந்தது**

சென்னை, ஜன.3–

மின்கட்டண உயர்வு உள்ளிட்ட காரணங்களால், 2023–24ல், தமிழக மின் வாரியத்தின் ஒரு யூனிட் மின்சாரத்துக்கு சராசரி வருவாய் மற்றும் செலவுக்கான இடைவெளி, 45 காசாக குறைந்துள்ளது.

தமிழக மின்வாரியத்துக்கு மின்கட்டணம் வசூல் மற்றும் மானியம் வாயிலாக வருவாய் கிடைக்கிறது. மின்சாரம், நிலக்கரி, உபகரணங்கள் கொள்முதல், ஊழியர்கள் சம்பளம் போன்றவற்றால் செலவுகள் ஏற்படுகின்றன.

வரவை விட செலவு அதிகம் இருப்பதால், தொடர்ந்து இழப்பு ஏற்படுகிறது. இதற்கு, தனியாரிடம் அதிக விலைக்கு மின்சாரம் வாங்குவதே முக்கிய காரணம். கடந்த இரு ஆண்டுகளாக மின் கட்டணம் உயர்த்தப்பட்டது.

மேலும், சொந்த மின் உற்பத்தி அதிகரிப்பு, செலவு குறைப்பு போன்ற நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டன.

இதனால், 2023–24ல் ஒரு யூனிட் மின்சாரத்துக்கான சராசரி வருவாய், செலவுக்கான இடைவெளி, 45 காசாக குறைந்துள்ளது.

அந்த ஆண்டில் ஒரு யூனிட் வாயிலாக கிடைத்த சராசரி வருவாய், 10.41 ரூபாயாகவும், செலவு, 10.86 ரூபாயாகவும் இருந்தது.

**10 ஆண்டுகளாக யூனிட்டிற்கான சராசரி வருவாய் செலவு விபரம்:**

| ஆண்டு | வருவாய் | செலவு | இடைவெளி |
|---|---|---|---|
| | ரூபாய் | | |
| 2014 / 15 | 5.53 | 7.19 | 1.66 |
| 2015 / 16 | 6.26 | 6.98 | 0.72 |
| 2016 / 17 | 6.73 | 7.25 | 0.52 |
| 2017 / 18 | 6.82 | 7.72 | 0.9 |
| 2018 / 19 | 6.49 | 7.82 | 1.33 |
| 2019 / 20 | 6.86 | 8.12 | 1.26 |
| 2020 / 21 | 7.04 | 8.53 | 1.49 |
| 2021 / 22 | 7.61 | 9.1 | 1.49 |
| 2022 / 23 | 9.37 | 10.59 | 1.22 |
| 2023 / 24 | 10.41 | 10.86 | 0.45 |

**எந்த பிரிவிலிருந்து எவ்வளவு வருவாய்?**

| | | |
|---|---|---|
| உயரழுத்த தொழிற்சாலை யூனிட்டுக்கு | – | ரூ. 11.29 |
| உயரழுத்த வணிகம் | – | ரூ. 11.20 |
| அரசு நிறுவனங்கள் | – | ரூ. 10.75 |
| தாழ்வழுத்த தொழிற்சாலை | – | ரூ. 9.49 |
| தாழ்வழுத்த வணிகம் | – | ரூ. 12.03 |
| உள்ளாட்சி அமைப்புகள் | – | ரூ. 9.29 |
| வீடுகள் | – | ரூ. 2.96 |

**அதிக வருவாய் பிரிவு எது?**

வீடு, தொழிற்சாலை, வணிக நிறுவனங்கள் என ஒவ்வொரு பிரிவுக்கும், ஒரு யூனிட் மின் பயன்பாட்டிற்கு, தனித்தனி மின்கட்டணம் வசூலிக்கப்படுகிறது. அதில், 2023 – 24ல் அதிகபட்சமாக, தாழ்வழுத்த **வணிகப் பிரிவில் இருந்து** சராசரியாக ஒரு யூனிட்டிற்கு, 12.03 ரூபாய் வருவாய் கிடைத்துள்ளது.

## குந்தா நீர் மின் உற்பத்தியில் தொடரும் சாதனை

**...பொறியாளர் சங்கம் வாழ்த்துகிறது**

குந்தா மின் நிலையம்–2, 1960–ஆம் ஆண்டு தொடங்கப்பட்டதிலிருந்து, மாதாந்திர மின்னுற்பத்தி 1000 LU மதிப்பை கடந்திருக்கும் அற்புத சாதனையை இதுவரை எட்டு முறை அடைந்துள்ளது. முந்தைய நிகழ்வுகள் கீழே விவரிக்கப்படுகின்றன:

| | | |
|---|---|---|
| செப்டம்பர் 1972 | : | 1001.66 LU |
| ஏப்ரல் 1974 | : | 1002.69 LU |
| அக்டோபர் 1979 | : | 1020.56 LU |
| மார்ச் 1980 | : | 1069.73 LU |
| செப்டம்பர் 1982 | : | 1000.26 LU |
| ஆகஸ்ட் 1992 | : | 1073.93 LU |
| ஜூலை 2006 | : | 1004.18 LU |

தீவிரமான இடைவெளிக்குப் பிறகு, 2024–ஆம் ஆண்டு மீண்டும் இந்த சாதனை நிகழ்ந்துள்ளது. இந்த ஆண்டு மாதாந்திர உற்பத்தி 1007.19 LU ஆக பதிவாகியுள்ளது. இந்த சாதனை குந்தா மின் நிலையம் 2–ன் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் அர்ப்பணிப்பு மற்றும் கடின உழைப்பின் ஆதாரமாகும். இந்த பிரமாண்ட சாதனைக்காக அவர்களுக்கு மனமார்ந்த வாழ்த்துக்கள். மின் நிலைய வரலாற்றில் இது ஒரு பெருமையான தருணமாகும்.

நன்றி.

## TN aims to generate 7.5K MW addl Renewable Power via 3 new Policies

S.Guruvanmikanathan, Chennai

The state is aiming to add 7,500 Megawatt (MW) of re newable energy capacity in the financial year 2025-26, supported by new policies, plans from major corporate players, and exemption from interstate transmission charges.

A senior official from Tamil Nadu Green Energy Corporation Limited (TNGE- CL) told TNIE, "Recently, the Tamil Nadu government introduced three policies for wind, pumped hydro and small hydro power to boost installed capacity. Many corporate players are approaching us to set up windmills and pumped storage power plants across the state."

TN's total renewable energy capacity rose to 24,091 MW by November 2024, up from 19,983.42 MW in March 2024. This reflects an increase of 4,107.58 MW in the first eight months of the current financial year (between April and November). The official added that the state is likely to add another 1,000 MW of renewable energy capacity by March end.

Highlighting Tamil Nadu's leadership in renewable energy, another official noted. "As of March 2024, Tamil Nadu ranked third in the country, accounting for 11.63% of the renewable energy installed in the country"

During 2023-24, Tamil Nadu ranked fifth in renew- able energy generation, producing 33.17 billion units (BU) and accounting for 9.22% of the renewable energy generated in the country. Specifically, for energy from solar, wind, bio power, and small hydro power, the state ranked fourth, generating 29.60 BU, which is 13.11% of the total.

Renewable energy accounted for 26.90% of Tamil Nadu's total energy generation in the state. Most of this came from wind power, which contributed 50.98%, followed by solar power at 35.39%. "We aim to generate 100 BU of renewable energy by 2030," the official said.

He also added, "The power supply situation is expected to improve with the increased pace of capacity additions led by renewables. However, the energy transitions towards renewables will continue to hinge on the development of hybrid and energy storage capacities and an adequate increase in evacuation infrastructure."

**Renewable Energy Installed capacity as on November 30, 2024**

| | | | |
|---|---|---|---|
| Small Hydro | - | 123.05 | MW |
| Wind | - | 11,317.24 | MW |
| Bio Power | - | 1,045.45 | MW |
| Solar | - | 9,427.06 | MW |
| Large Hydro | - | 2,178.20 | MW |
| Total Capacity | - | 24,091.00 | MW |

# ஒருங்கிணைந்த ஓய்வூதியத் திட்டம்

**UNIFIED PENSION SCHEME (UPS)**

ஒருங்கிணைந்த ஓய்வூதியத் திட்டத்தின் முக்கிய அம்சங்கள் – தொகுப்பு:

- ஒருங்கிணைந்த ஓய்வூதியத் திட்டம், புதிய ஓய்வூதியத் திட்டத்தில் (NPS) மாற்றங்களுக்கான கோரிக்கைகளை நிவர்த்தி செய்கிறது.
- இது ஓய்வூதியத்திற்குப் பிந்தைய உத்தரவாதமான ஓய்வூதியத் தொகையுடன் நிதிப் பாதுகாப்பை உறுதி செய்கிறது.
- சிறப்புக் குழுக்கள் முதல் RBI, உலக வங்கி மற்றும் மாநிலங்களுடனான ஆலோசனைகள் வரை –100+ கூட்டங்கள் UPS ஐ உருவாக்க வழிவகுத்தது,
- இப்போது அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

ஒருங்கிணைக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டம் (UPS) குறைந்தபட்சம் 25 ஆண்டுகள் சேவையில் உள்ள ஊழியர்களுக்கு சராசரி அடிப்படை ஊதியத்தில் (கடந்த 12 மாதங்களில் கணக்கிடப்பட்ட) 50% உறுதிசெய்யப்பட்ட ஓய்வூதியத்தை உறுதி செய்கிறது.

- குறைந்த சேவைக் காலங்களைக் கொண்டவர்கள் (குறைந்தபட்சம் 10 ஆண்டுகள்) விகிதாசாரப் பலன்களைப் பெறுகிறார்கள்.
- ஓய்வு பெற்றவர்களுக்கு வலுவான பாதுகாப்பு வலையை வழங்குகிறது. ஒருங்கிணைக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டம் (UPS)) பணியாளரின் ஓய்வூதியத்தில் 60% அவர்கள் இறந்தால் அவர்களைச் சார்ந்தவர்களுக்கு உறுதி செய்வதன் மூலம் உத்தரவாதமான குடும்பப் பாதுகாப்பை வழங்குகிறது.
- ஒருங்கிணைந்த ஓய்வூதியத் திட்டத்தின் (UPS)) கீழ், குறைந்தபட்சம் 10 ஆண்டுகள் பணிபுரியும் ஊழியர்களுக்கு மாதம் Rs.10,000 குறைந்தபட்ச ஓய்வூதியம் உத்தரவாதம் அளிக்கப்படுகிறது. இது ஒரு முக்கியமான பாதுகாப்பு வலையாக செயல்படுகிறது.
- பணவீக்கம் மற்றும் நிதி நிச்சயமற்ற நிலைகளுக்கு எதிராக ஓய்வு பெற்றவர்களை பாதுகாத்து, நிலையான மற்றும் பாதுகாப்பான ஓய்வுக்குப் பிந்தைய வாழ்க்கையை உறுதி செய்கிறது.

அரசு ஊழியர்களுக்கான ஒருங்கிணைந்த ஓய்வூதியத் திட்டம் (UPS) தொழில்துறை தொழிலாளர்களுக்கான அகில இந்திய நுகர்வோர் விலைக் குறியீட்டின் (AICPI-IW) அடிப்படையில் அகவிலை நிவாரணத்தை வழங்கும் பணவீக்க பாதுகாப்பு அம்சத்தை உள்ளடக்கியது.

**பணவீக்க அட்டவணை:** உறுதிசெய்யப்பட்ட ஓய்வூதியம், உறுதிசெய்யப்பட்ட குடும்ப ஓய்வூதியம் மற்றும் உறுதிசெய்யப்பட்ட குறைந்தபட்ச ஓய்வூதியம் சேவை ஊழியர்களைப் போலவோ தொழில் துறை தொழிலாளர்களுக்கான அகில இந்திய நுகர்வோர் விலை குறியீட்டின் அடிப்படையில் அகவிலை நிவாரணம் பணிகொடைக்கு மேலதிகமாக ஓய்வூதியத்தில் மொத்த தொகை செலுத்துதல் பூர்த்தி செய்யப்பட்ட ஒவ்வொரு ஆறு மாத சேவைக்கும் ஓய்வுபெறும் தேதியின்படி மாதாந்திர ஊதியத்தில் 1/10 பங்கு (ஊதியம் + DA). இந்தக் கொடுப்பளைவு உறுதி செய்யப்பட்ட ஓய்வூதியத்தின் அளவைக் குறைக்காது.

## மாநில செயற்குழு கூட்ட அறிக்கை

தமிழ்நாடு மின் வாரிய பொறியாளர் சங்கத்தின் மாநில செயற்குழுக் கூட்டம் 22.12.24 அன்று திருச்சி ஹோட்டல் அஜந்தாவில் மாநில தலைவர் பொர்.A.அந்தோனி படோவராஜ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

22.12.24 அன்று காலை 10.30 மணிக்கு செயற்குழுக் கூட்டம், தமிழ்த்தாய் வாழ்த்துடன் துவங்கியது. திருச்சி மண்டலச் செயலாளர் பொர்.C.நரசிம்மன் வரவேற்புரை ஆற்றினார்.

மாநில தலைவர் பொர்.A.அந்தோனி படோவராஜ் அவர்கள் தலைமை உரை நிகழ்த்தினார். அவர் தனது உரையில் கடந்த 22.6.24 மற்றும் 23.6.24 ஆகிய இரண்டு தேதிகளில் கன்னியாகுமரியில் நடைபெற்ற மாநில பொதுக்குழுவிற்கு பின் கூட்டப்பட்டுள்ள இந்த மாநில செயற்குழுக் கூட்டத்தின் முக்கியத்துவத்தை எடுத்துக்கூறினார். பெரும்பாலான கிளைகளில் மாதந்தோறும் நடைபெறும் மாதாந்திரக் கூட்டங்களை பாராட்டிய அவர், கடந்த 25.11.24 அன்று ஒரே நாளில் அனைத்து மண்டலங்களும், மண்டலக் கூட்டங்களை நடத்தியது சிறப்பு என்று பாராட்டினார். தொடர்ந்து அனைத்து கிளைகளும் மாதாந்திரக் கூட்டங்களை நடத்த வேண்டும் என்றார். இரத்ததான முகாம்களை சிறப்பாக நடத்திய, இனி நடத்த இருக்கிற கிளைகளை பாராட்டிய மாநிலத் தலைவர், சங்கம் சமீபத்திய பதவி உயர்வுகளை பெற எவ்வளவு கடுமையாக போராடியது என்பதனை எடுத்துரைத்தார்.

செயற்குழு உறுபினர்கள் அனைவரும் இந்த கூட்டத்தை ஆக்கபூர்வமாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு தன் உரையை நிறைவு செய்தார்.

தொடர்ந்து பொதுச் செயலாளர் பொர்.V.S.சம்பத்குமார் அவர்கள் பேசினார். அவர் தனது பேச்சில் நாடு முழுவதும் மின் துறையில் தனியார்மய தாக்கம் அதிகரித்துள்ள நிலையில் அது மாற்று வடிவங்களில் தமிழ்நாட்டிலும் புகுத்தப்படுகிறது என்றார். வாரியத்தில் மின் விபத்தினை தடுக்க சங்கம் எடுத்துக்கொண்டுள்ள பல்வேறு செயல்பாடுகளை விளக்கிய அவர், மின் விபத்துகளுக்கு பொறியாளர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுவதையும், சட்ட ரீதியான நடவடிக்கைகள் குறித்தும் உரிய முறையீடுகள் செய்யப்படும் என்றார்.

மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்களையும், புதிய வாரியத் தலைவர் மற்றும் உயர் அதிகாரிகளையும் சங்கம் சந்தித்து பாராட்டு தெரிவித்ததை சுட்டிக்காட்டிய பொதுச்செயலாளர் தொடர்ந்து நம் கோரிக்கைகள் குறித்து மூறையீடுகள் செய்யப்பட்டு வருகின்றன என்றார். கிளைகள் மட்டத்தில் கிளைகள் பிரச்சனைகள் குறித்து கிளைச் செயலாளர்கள் அதிகாரிகளிடம் உரிய முறையீடுகளை செய்ய வேண்டும் என்றார்.

தற்போது வாரியத்தில் Restructure,Reforms (Formation of Divisions, reorganization, Redeployment etc.,) ஆகிய வேலைகள் அனைத்து இடங்களிலும், குறிப்பாக சென்னையில் நடைபெறுவதாகவும் அதன் பாதிப்புகள் குறித்து பரிசீலித்து வருவதாகவும் கூறினார்.

BP4 இன் பாதிப்பு குறித்து சங்கம் உரிய தரவுகளுடன் தொடர்ந்து முறையிட்டதால் மட்டுமே தற்போது BP4 இந்த அளவிற்காவது மாற்றங்களை புகுத்தி வெளியிடப்பட்டுள்ளது, தொடர்ந்து பொறியாளர்களுக்கு பாதிப்பின்றி தடுக்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றார்.

பணி ஒய்வு பெறுபவர்கள், மற்ற பணப் பலன்கள் வேண்டுபவர்களின் தேவைகள் அந்தந்த மேற்பார்வை அலுவலகங்களில் ERP யில் உடன் ஏற்றுவதை கிளைகள் உறுதி செய்யவும் கேட்டுக்கொண்டார். விழுப்புரம் வட்டத்தில் பட்டயம் படிப்பு குறித்து இழிவாக பேசிய செயற் பொறியாளரின் பேச்சினை கண்டித்த பொதுச்செயலாளர் அது குறித்து வாரியத்தில் மேல் முறையீடு செய்யப்பட்டுள்ளது என்றார்.

**பதவி உயர்வுகள்:**

பதவி உயர்வுகள் குறித்து பேசிய பொதுச் செயலாளர் அவர்கள் பல்வேறு இடர்பாடுகளை கடந்து 1000 பேருக்கு (D+ND) JEII பதவி உயர்வு பெற்றுத்தந்ததை விரிவாக எடுத்துக் கூறினார். மேற்கண்ட பதவி உயர்வுக்கு சங்கம் மட்டுமே காரணம் என்று கூறிய அவர், இதனை அனைவரிடமும் எடுத்துக்கூறி நமது உறுப்பினர் அல்லாத பொறியாளர்களை சங்கத்தில் இணைத்திட வேண்டும் என்றார்.

உதவி செயற்பொறியாளர் (மின்னியல்) பதவி உயர்வு விரைவில் பெற (தற்போது பெறப்பட்டுவிட்டது) தொழில் நுட்ப உதவியாளர் / மின்னியல் (உள் முகத் தேர்வு) விரைவில் பெறவும், உரிய நடவடிக்கையினை சங்கம் மேற்கொண்டு வருவதாக கூறிய அவர் மற்ற பதவி உயர்வுகள் பெறவும் சங்கம் தொடர் முயற்சிகள் மேற்கொள்வதாக கூறினார்.

இரண்டு மண்டலங்களில் (கோவை மற்றும் தஞ்சை) பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டதற்கு வாழ்த்து தெரிவித்த அவர் மற்ற மண்டலங்களிலும் பயிற்சி வகுப்புகளை நடத்த கோரினார்.

இரத்ததான முகாம் எவ்வாண்டும் போல் இவ்வாண்டும் சிறப்பாக நடைபெற்றது குறித்து மகிழ்ச்சி தெரிவித்த அவர் சூழ்நிலை காரணமாக நடத்தாத கிளைகள் விரைவில் நடத்த வேண்டும் என்றார்.

மற்ற பதவி உயர்வுகளின் நிலைகள் மற்றும் வழக்குகள் குறித்து விரிவாக பேசிய பொதுச்செயலாளர், கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி கூறி நிறைவு செய்தார்.

அடுத்து பேசிய மாநில பொருளாளர் பொர்.N.R.செந்தில் அவர்கள் ஆண்டு சந்தா மற்றும் ஆண்டு நன்கொடைகள் அனைத்து கிளைகளிலும் தவறாமல் பிடித்தம் செய்யப்படுவது குறித்து நன்றி தெரிவித்த அவர். அனைவரிடமும் WR DONATION, PROMOTION DONATION ஆகியவற்றை பெற வேண்டும் என்று வலியுறுத்தினார். எதிர்கால நீதிமன்ற வழக்குகளை எதிர் கொள்ள சங்கதிற்கு அதிக நிதி தேவை என்பதால் சங்கத்தின் பொருளாதாரம் வலுவாக இருப்பது அவசியம் என்றார். சங்கத்தின், கிளைகள் மாதந்தோறும் வரவு செலவு கணக்குகளை மைய அமைப்பிற்கு அனுப்பி வைக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

தொடர்ந்து பேசிய மாநில அமைப்பு செயலாளர் மற்றும் AIFOPDE தென் மண்டல தலைவர் முனைவர் சா.சம்பத் அவர்கள், சங்கம் அங்கம் வகிக்கும் AIFOPDE யின் தற்போதைய செயல்பாடுகள் குறித்தும், வரும் காலங்களில் மின்சார வாரியங்கள் தனியார்மயம் ஆவது குறித்தும் பேசினார்.

தனியார்மயம் என்னும் புற்றுநோய் தற்போது உத்திரபிரதேசத்திலும், சண்டிகாரிலும் நுழைந்துவிட்டதை விரிவாக கூறிய அவர் அதற்காக நாடு முழுவதும் நடைபெறும் போராட்டங்கள் குறித்தும் விளக்கினார்.

எதிர்காலத்தில் இந்த தனியார்மயம் தமிழகத்திலும் வரவிடாமல் தடுக்க ஒரே ஆயுதம் நம் விழிப்புணர்வு மற்றும் ஒற்றுமை மட்டுமே என்று கூறினார். அடுத்து காமதேனு நலநிதி செயலாளர் பொர்.V.சந்தோஷ்குமார் அவர்கள் நலநிதி குறித்து பேசினார்.

காமதேனு நலநிதி சங்கத்தின் ஆணிவேர் என்றும், உறுப்பினர் இறந்துவிட்டால் விரைந்து அந்த குடும்பத்தின் இழப்பினை நலநிதியால் சங்கம் மட்டுமே ஓரளவு ஆறுதல் சொல்கிறது என்று நலநிதியின் முக்கியத்துவம் குறித்து விளக்கினார். பொதுக்குழுவிற்கு பிறகு இதுவரை 357 பேர் KBF-VI திட்டதில் இணைந்துள்ளதை வரவேற்ற அவர், KBF-VI திட்டத்தை முழுமையாக நிறைவேற்ற அனைத்து உறுப்பினர்களயும் கிளைகள் விரைந்து சேர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கையோடு தன் உரையை நிறைவு செய்தார்.

தொடர்ந்து செயற்குழு உறுப்பினர்களின் சந்தேகங்கள் மற்றும் கேள்விகளுக்கு பொதுச் செயலாளர் பதிலளித்து பேசினார்.

செயற்குழுவிற்கு உதவிய அனைவருக்கும் தலைமை நிலையச் செயலாளர் பொர்.P.M.மாரியப்பன் அவர்கள் சங்கத்தின் சார்பில் நன்றியைத் தெரிவிக்க தேசிய கீதம் பாடி செயற்குழு நிறைவு பெற்றது.

## TNEB Pensioners App:

In the Modern Era, Digitalization is mandatory for the present Life style. Only with the help of the mobile Apps, particularly in money transactions and transportation.

Employees of Government of Tamilnadu are instructed to apply through Kalanjiam App for leave, terminal benefits and all advances etc from 01.01.25.

Central Government employees are submitting their Life certificate through Jeevan Pramaan App.

In continuation, our former CMD Thiru.Rajesh Lakhoni IAS, has directed to design & develop the app with face authentication method with is guidance TNEB has developed and app indigenously to make easy to the pensioners and family pensioners the same was successfully launched on 09.01.25 by our Honorable Deputy Chief Minister of Tamilnadu.

Now TNEB Pensioners and family Pensioners can submit their Life certificate through this Pensioners App and they can avail many useful required features from this App. Downloading & operating procedure of this App are clearly explained in the flow chart (Page No.21). Let us all use this TNEB Pensioners App for hassle free life.

**Er.R.Vallirajan** / Gen.Sec. / TNEBRES

# விண்வெளியில் சாதித்து வரும் இந்தியா

இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) மீண்டும் ஒருமுறை உலகின் கவனத்தை ஈர்த்துள்ளது. இரு செயற்கைக் கோள்களை விண்வெளியில் மிக நேர்த்தியாக ஒன்றையொன்று நெருங்கச் செய்து, புதிய சாதனை படைத்துள்ளது. 'SpADeX' என்ற இந்த முயற்சி, இந்தியாவின் விண்வெளி ஆராய்ச்சித் துறையில் ஒரு புதிய அத்தியாயத்தைத் தொடங்கியுள்ளது.

முதல் முயற்சியில் எதிர்பாராத சிக்கல்கள் ஏற்பட்டபோதிலும், இஸ்ரோவின் விஞ்ஞானிகள் தளராத மனஉறுதியுடன் அதனை சமாளித்து வெற்றிக் கண்டுள்ளனர். SDXO1 (Chaser) மற்றும் SDXO2 (Target) என்ற இரு செயற்கைக்கோள்களை மூன்று மீட்டர் தொலைவுக்குள் கொண்டு வந்து, அவற்றின் இயக்கத்தை துல்லியமாகக் கட்டுப்படுத்தியது இந்திய விண்வெளி விஞ்ஞானிகளின் திறமைக்கு சான்றாக உள்ளது.

இந்த சாதனையின் முக்கியத்துவம் பல பரிமாணங்களைக் கொண்டது. விண்வெளியில் செயற்கைக்கோள்களை இணைக்கும் தொழில்நுட்பத்தில் இந்தியா தன் திறனை நிரூபித்துள்ளது; எதிர்காலத்தில் விண்வெளிக் கழிவுகளை அகற்றுவதற்கான தொழில்நுட்ப அடித்தளம் உருவாக்கப்பட்டுள்ளது; விண்வெளி ஆராய்ச்சியில் பொருளாதார சிக்கனத்துடன் புதுமையான தீர்வுகளை உருவாக்கும் இந்தியாவின் திறன் மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

சத்தீஷ் தவான் விண்வெளி மையத்திலிருந்து பிஎஸ்எல்வி–C60 (PSLV C60) ராக்கெட் மூலம் விண்ணில் செலுத்தப்பட்ட இந்த செயற்கைக்கோள்கள், நமது விண்வெளி விஞ்ஞானிகளின் கடின உழைப்பையும், அர்ப்பணிப்பையும் பறைசாற்றுகின்றன. முதல் முயற்சியில் ஏற்பட்ட தடையை மீறி, இரண்டாவது முயற்சியில் வெற்றி பெற்றிருப்பது, இந்திய விஞ்ஞானிகளின் விடாமுயற்சிக்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

இந்த வெற்றி வெறும் தொழில்நுட்ப சாதனை மட்டுமல்ல; இது இளம் விஞ்ஞானிகளுக்கு ஊக்கமளிக்கும் முன்னுதாரணமாகவும், நமது நாட்டின் அறிவியல் முன்னேற்றத்தின் அடையாளமாகவும் திகழ்கிறது. தொடர்ந்து புதிய சவால்களை ஏற்று, அவற்றை வெற்றிகரமாக எதிர்கொள்ளும் இஸ்ரோவின் பயணம், இந்தியா வின்விண்வெளி ஆராய்ச்சித் துறையின் வளர்ச்சிக்கு உறுதியான அடித்தளமாக அமைந்துள்ளது. இந்த சாதனைக்குப் பின்னால் உழைத்த ஒவ்வொரு விஞ்ஞானி, தொழில்நுட்ப வல்லுநர், ஊழியர் ஆகிய அனைவரும் நம் நாட்டின் பெருமைக்குரிய சொத்துக்கள். அவர்களின் அயராத உழைப்பும், அர்ப்பணிப்பும் நம் நாட்டின் விண்வெளி ஆராய்ச்சித் துறையை உலக அரங்கில் உயர்ந்த இடத்திற்கு கொண்டு சென்றுள்ளது

இந்த வெற்றி, வரும் காலங்களில் மேலும் பல சாதனைகளை நோக்கி இஸ்ரோ பயணிக்க வழிவகுக்கும் என்பதில் ஐயமில்லை. விண்வெளி ஆராய்ச்சியில் இந்தியாவின் தடம் மேலும் பதியப்பட, இது ஒரு புதிய தொடக்கமாக அமையும்.

## பணி ஓய்வு பெற்றனர் வாழ்த்துகிறோம்

கீழ்க்கண்ட பொறியாளர்கள் **31.12.2024** அன்று வாரியப் பணியிலிருந்து ஓய்வு பெற்றனர். அவர்களை பொறியாளர் சங்கம் நீண்ட ஆயுள், நல்ல உடல்நலம், நிறைந்த மனநிம்மதியுடன் வாழ வாழ்த்தி மகிழ்கிறது.

1. L. Panneerselvam, AEE / TKGTPS Vice President / Thiruvarur Branch. Phone: 7010595012
2. C. Palraj, JE I / Spl. Mtce. / Thiruvarur Divisional Secretary / Thiruvarur Branch. Phone: 9787093925
3. V. Samayamuthu, AEE / E / O&E / NCTPS II NCTPS Branch. Phone: 76390 24607
4. D. Samuel, JE I / Lines II / Korattur / Chennai West Branch. Phone: 9445695088
5. R. Tamilselvan, JE I / Enforcement / Villupuram / Villupuram Branch. Phone: 95006 36788
6. K. Venkatesan, JE I / 110 KV SS / Alangayam / Thirupathur Branch. Phone: 97514 87011

**VOLUNTARY RETIREMENT**

M. Sekar, JE II / Vadakuthu SS / Cuddalore Branch.
Phone: 9367639721



## திருமண அழைப்பிதழ்

மணமகள்
**திரு.C.R.மோகன்ராஜ்** M.Tech., AE., TNEB
**திருமதி.M.ரேவதி**
ஆகியோரின் மகள் திருநிறைச்செல்வி
**M.காயத்ரி,** M.Sc.,
(Food & Nutrition)
என்கிற மணமகளுக்கும்



மணமகன்
**திரு.G.பழனி**
**திருமதி.P.சாருலதா**
அவர்களின் மகன் திருநிறைச்செல்வன்
**P.ஜெய சரவணன்,** B.Tech.,
(Tata Consultancy Services, Siruseri)
என்கிற மணமகனுக்கும்

**சுபமுகூர்த்தம் : 10.02.2025 திங்கட்கிழமை காலை 5.30 மணிக்குமேல் 7.00 மணிக்குள்**



**வரவேற்பு : 09.02.2025 ஞாயிற்றுக்கிழமை**
**மாலை 6.00 - மணிக்குமேல்**
**இடம் : M.V.பேரடைஸ் (A/c)**
ஜி.என்.டி.சாலை, கவரைப்பேட்டை



**அழைத்து மகிழும் : பொர்.C.R.மோகன்ராஜ்,** M.Tech., AE., Joint Secretary / NCTPS Ph.9445116021

**மணமக்கள் எல்லா வளமும் பெற்று வாழ பொறியாளர் சங்கம் வாழ்த்துகிறது**

மின் அலை வளர்ச்சி நிதி ரூ.1,001/– அளித்துள்ளார், நன்றி

# TNEB PENSIONER'S APP AT YOUR DOOR STEP

## 1

Download and install the **"TNEB PENSIONER APP"** from Google Play store.

## 2

Download and install the **"AADHAR FACE RD"** Application for face recognition.

## 3


Once downloaded, The pensioners can utilize the service of the **"TNEB Pensioner APP"** submit their digital LC and make the process Hassle free.

## 4

### PENSIONER AUTHENTICATION

**Pensioner all to do is:**

- Open TNEB Pensioner APP.
- User to Register.
- Fill the required details (PPO NO/Account No/Mobile No).
- Enter OTP received and Submit to end registration process.




## 5

### TANGEDCO (DLC)

**TNEB LIFE CERTIFICATE:**

- Login TNEB Pensioner App with OTP Click on the TANGEDCO (DLC) Check box.
- Now click the Face Authentication area.
- Capture the Face on the circle using mobile front camera on the lighting area.
- Blink the eye when circle turn **"GREEN"** to capture.
- After face scanning DLC submission appears on the mobile screen along with PPO number and LC validity date.

# கண்ணீர் அஞ்சலி

**பொறியாளர்கள்**

1. 28.12.2024 **பொர்.M.சண்முகம்**, இளமின் பொறியாளர் / முறைபணி / 765 KV / வடசென்னை பூலிங்துணைமின் நிலையம் / சென்னை வடக்கு கிளை, **அவர்கள்.**
2. 10.01.2025 **பொர்.R.பாலமுருகன்**, துணை தலைவர், ராமநாதபுரம் கிளை **அவர்கள்.**
3. 19.01.2025 **பொர்.M.சரவணன்**, உதவிப் பொறியாளர் / KGTPS மருதூர், நாகை கிளை **அவர்கள்.**
4. 24.01.2025 **பொர்.S.உடையப்பன்**, EE Operation / பசுமலை, மதுரை கிளை **அவர்கள்.**

பொறியாளர்கள் மறைவிற்கு பொறியாளர் சங்கம் கண்ணீர் அஞ்சலி செலுத்துகிறது. பொறியாளரை இழந்து வாடும் குடும்பத்திற்கு பொறியாளர் சங்கம் தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறது.

**பொறியாளர் குடும்பத்தினர்கள்**

1. 27.12.2024 அன்று **பொர்.R.ராமதுரை**- உதவி பொறியாளர் / பள்ளிபாளையம் அக்ரஹாரம், ஈரோடு கிளை அவர்களின் **மகன்.** 6379237667.
2. 28.12.2024 அன்று **பொர்.கருணாகரன்**- இளமின் பொறியாளர் / தேவனூர், விழுப்புரம் கிளை அவர்களின் **தாயார்.** 6383891518.
3. 05.01.2025 **பொர்.K.சுதாகரன்**, உதவி செயற்பொறியாளர் / இ&பா / சேலையூர் கிளை தலைவர், சென்னை தெற்கு கிளை அவர்களின் **தந்தையார்.** 8148725605
4. 06.01.2025 **பொர்.S.சீனிவாசன்**, இளமின் பொறியாளர் / குடவாசல் துணை மின்நிலையம், திருவாரூர் கிளை அவர்களின் **தாயார்.** 9043243439
5. 07.01.2025 அன்று **பொர்.G.செல்வராஜ்**, உதவிப் பொறியாளர் / முறைபணி / 110KV Grid SS / திருச்சி, திருச்சி கிளை அவர்களின் **தாயார்.** 9488694033
6. 07.01.2025 **பொர்.P.கலாவதி**, உதவிப் பொறியாளர் / முறைபணி / 110KV R.K.நகர், சென்னை வடக்கு கிளை அவர்களின் **கணவர்**, 9488694033
7. 13.01.2025 **பொர்.கிருஷ்ணன்**, செயற்பொறியாளர் / Shemes / திருச்சி, திருச்சி கிளை அவர்களின் **தாயார்**, 9443122125
8. 20.01.2025 **பொர்.ஹரிஹரபுத்திரன்**, இளமின் பொறியாளர் / 110KV / WF SS / இருக்கண்துறை அவர்களின் **தந்தையார்.** 8608418807
9. 23.01.2025 **பொர்.G.S.விஜேந்திரபாபு**, JE / Shift / 110KV SS / SIPCOT புதுக்கோட்டை கிளை அவர்களின் **தந்தையார்.** 8807501158
10. 23.01.2025 **பொர்.P.கார்த்திக்,** JE / Somasipadi section, திருவண்ணாமலை கிளை அவர்களின் **தாயார்.** 9894018547
11. 25.01.2025 **பொர்.N.சேகர்,** உதவி பொறியாளர் / இப / புறநகர் / ஆத்தூர் மற்றும் பொதுக்குழு உறுப்பினர் / சேலம் கிளை அவர்களின் **தந்தையார். 9790006177**

ஆகியோர் இயற்கை எய்தினார்கள். குடும்பத்தினரை இழந்து வாடும் பொறியாளர்களுக்கு பொறியாளர் சங்கம் தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறது.

## Accolades Galore to Er.Udayappan



Very sad... Obviously a great loss to the Utility. The expertise he had with SF6 breaker mechanism is very astounding and literally saved huge amount of money. Just by Rs. 2,000/- he has brought back the 110 KV breaker from failed condition. Ground reality is department recognition is meagre. Sustained prayers for the selfless departed soul to reach its ultimate destination.

Er. Udayappan sir is such a humble and lovely person. His dedication and sincerity are unparalleled. Though being an EE he still used to travel with his toolkit and repair the breakers throughout the circle. Heard He was repairing a breaker despite his illness yesterday. Spoke to him day before yesterday about a breaker issue and his sudden demise is still hard to accept.

Almost 50% of the breakers in Kayathar 230KV are still in service because of him. He saved a huge fortune to board by carrying out the Breaker overhauling inhouse. He was the one, who taught us to identify the SF6 contamination issue, we are largely facing in the south. We used to call him “The Breaker Doctor” here. TNEB has lost a valuable asset and a wonderful soul. May he take rest in the heavenly abode.

Over these years he had attended hundreds of Breaker defects and restored them. He performed this duty as a “Service” with dedication. I stand corrected. He has reportedly attended thousands of Circuit Breakers. Irrespective of the numbers, he will be remembered for his selfless service and the Board will be grateful to him for saving huge amount of time and money to the Organisation.

Heartfelt condolences to the bereaved family members. May his noble sole rest in peace. Exponent of circuit breaker. Board lost one of it's sincere and dedicated son. OM Shanthi.

Prayers for his soul to rest in peace. He was a wonderful person. A true leader, pooling in all talents of his team. He did a marvelous job at Pasumalai fabricating cable trays and innovative ideas to simplify the day to day work. And what not...

---

அன்பு பொறியாளர்களே ! வணக்கம்.

நம் சங்க உறுப்பினர்கள் அனைவரையும் காமதேனு நலநிதி VI திட்டத்தில் இணைய வைக்க வேண்டும் என்ற இலக்கினை நிர்ணயித்துக் கொண்டு அதற்காக கடுமையாக பணிபுரிந்து வந்தோமானால் எதிர்பாராத இழப்புகளை சந்திக்கும் நம்முடைய பட்டய பொறியாளர்களின் குடும்பங்களுக்கு ஒரு உதவிகரமான தொகையினை நம்மால் வழங்கிட இயலும்.

காமதேனு நலநிதி திட்டத்தின் ஐந்தாவது (KBF- V) திட்டத்திலிருந்து ஆறாவது திட்டத்திற்கும் (KBF- VI) மற்றும் இதுவரை எந்த திட்டத்திலும் இணையாதவர்களை நேரடியாக ஆறாவது திட்டத்தில் (KBF- VI) சேர்ப்பதற்கு நமது சங்க பொறுப்பாளர்கள் ஒவ்வொருவரும் முயற்சி செய்து இலக்கினை அடைய ஒன்றிணைந்து உழைக்க வேண்டும் என்று உரிமையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

நம் சங்க உறுப்பினர்கள் 3000 பேர் காமதேனு நலநிதியில் இணைந்து விட்டால் நம்முடைய இலக்கான Rs.3,50,000/– என்ற பணப்பயனை அலுல்படுத்திட இயலும். ஆகவே நாம் அனைவரையும் காமதேனு நலநிதி திட்டம் –VI ல் உடனே இணைக்க மிகத் தீவிரமாக முயற்சி செய்வோம்.

பொர்.**R.சந்தோஷ் குமார்,** செயலாளர்/ காமதேனு நலநிதி

# மதிப்புக்குரிய வாரிய உயரதிகாரிகளை நமது பொறியாளர் சங்கப் பொறுப்பாளர்கள் சந்தித்து புத்தாண்டு மற்றும் பொங்கல் நல்வாழ்த்துக்களை தெரிவித்தார்கள்



**Er.M.SENTHILKUMAR** / Director / Technical / TNPGCL



**Er.K.KARUKKUVEL RAJAN** / Director/Projects / TNPGCL



**Er.S.LAKSHMI** / Director / Operation / TANTRAnSCO



**Thiru.K.SUNDARAVADHANAM** / Director/Finance/TANTRANSCO



**Er.P.Chandrasekaran,** Director / Transmission Projects/ TANTRANSCO



**Tmty.B.RAJESWARI,** Director / Finance /TNGECL



**Thiru.K.BALAKRISHNAN** / Director / Finance / TNPGCL



**Tmty.K.MALARVIZHI** / Director / Finance / TNPDCL



**Er.R.K.VINODHAN** / Director / Technical / TNGECL



**Er.R.DEVARAJ** / Secretary



**Thiru.G.CHINNA NAGUR** / Legal Advisor



**Er.M.SUDARSAN** / CE/Personnel




உத்திரபிரதேசம் மற்றும் சண்டிகர் மின்வாரியத்தை தனியார் மயமாக்களுக்கு எதிர்ப்பு தெரிவித்தும் அம்மாநிலங்களின் போராடும் மின்வாரிய பணியாளர்களுக்கு ஆதரவாக கூட்டு நடவடிக்கைக்குழு சார்பாக சென்னை தலைமையகம் முன்பு 23.01.2025 அன்று கண்டன ஆர்பாட்டம் நடைபெற்றது




On 24.01.2025 Nagai Branch Blood donation camp conducted at Mayiladuthrai District Government Hospital.



On 24.01.2025 Nagai Branch Blood donation camp conducted at Nagapattinam District Government Hospital.

Published by : V.S. Sampathkumar, General Secretary on behalf of
Tamil Nadu Electricity Board Engineers' Sangam, # 144, Anna Salai, Chennai - 600 002.
Printed by : T.P. Kumar Gupta at T.P. Offset Printers, Old No. 15/1, New No. 18,
Amman Koil St,1st Lane, Kondithope, Chennai - 600 079.
Edited by : U.Rajendran, Publication Secretary, TNEB Engineers' Sangam